


**20. 10. 2025**

## தலைப்பு செய்திகள்

- **உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட ஐ.என்.எஸ்.** விக்ராந்த் போர்க்கப்பல் சுயசார்பு பாரதத்தின் அடையாளமாக திகழ்கிறது என பிரதமர். திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.
- **தீபஒளி திருநாளாம் தீபாவளி பண்டிகை** தமிழகத்தில் இன்று உற்சாகத்துடனும், பாரம்பரிய கோலாகலத்துடனும் கொண்டாடப்பட்டு வருகிறது.
- **பீஹார் மாநிலத்தில் அடுத்தமாதம் 11-ம் தேதி** நடைபெறவுள்ள 2-வது கட்ட சட்டப்பேரவை தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்றுடன் நிறைவடைகிறது.
- **தமிழகத்தில் தொடர்மழையால், வைகை, சோத்துப்பாறை** அணைகள் நிரம்பியுள்ளன.
- கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
- **ராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சை, திருவாரூர், நாகை,** மயிலாடுதுறை, கடலூர் ஆகிய மாவட்டங்களில் இன்று கன, மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வுமையம் அறிவித்துள்ளது.

## இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖

### பிரதமர்

**கோவா கடற்கரையில் ஐ.என்.எஸ். விக்ராந்த்** போர்க்கப்பலில் கடற்படை வீரர்களுடன் பிரதமர் திரு.நரேந்திரமோடி இன்று தீபாவளி பண்டிகையை கொண்டாடினார்.

நிகழ்ச்சியில் உரையாற்றிய பிரதமர், இந்திய ராணுவத்தின் துணிச்சல் மற்றும் முப்படைகளுக்கு இடையிலான மகத்தான ஒருங்கிணைப்பு, ஆபரேஷன் சிந்தூர் துல்லிய தாக்குதல் நடவடிக்கையின் போது பாகிஸ்தானை சரணடைய வைத்ததாக குறிப்பிட்டார்.

உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட ஐ.என்.எஸ். விக்ராந்த் போர்க்கப்பல் சுயசார்பு பாரதம் மற்றும் இந்தியாவில் தயாரிப்போம் திட்டத்திற்கு முக்கிய அடையாளமாக திகழ்கிறது என்றார்.

முப்படைகளின் துணிச்சலான வீரர்களுக்கு வணக்கம் செலுத்துவதாக பிரதமர் தெரிவித்தார்.

ஆயுதப்படைகள் வலுவாக இருக்க தன்னம்பிக்கையின் அவசியத்தை பிரதமர் எடுத்துரைத்தார்.

சிக்கலான தருணங்களை சீர்த்திருத்தங்களுடன் புரட்சியாக மாற்றியதை பிரதமர் சுட்டிக்காட்டினார்.

❖❖❖❖❖❖❖

**தீபாவளி பண்டிகை**

**தீபஒளி திருநாளாம் தீபாவளி பண்டிகை** தமிழகத்தில் இன்று உற்சாகத்துடனும், பாரம்பரிய கோலாகலத்துடனும் கொண்டாடப்பட்டு வருகிறது.

மக்கள் அதிகாலையில் எழுந்து புனித நீராடி புத்தாடைகள் உடுத்தி, உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் இனிப்புகளை வழங்கி தங்கள் வாழ்த்துக்களை பரிமாறி வருகின்றனர்.

இந்நாளையொட்டி குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு. நரேந்திரமோடி உள்ளிட்ட தலைவர்கள் மக்களுக்கு வாழ்த்துக்களை உரித்தாக்கி உள்ளனர்.

குடியரசு தலைவர் விடுத்துள்ள வாழ்த்து செய்தியில், தீமைக்கு எதிரான நன்மையின் வெற்றியை கொண்டாடும் இந்நன்னாளில் அனைவரும் வளமுடன் வாழ வாழ்த்தியுள்ளார்.

பிரதமர் விடுத்துள்ள வாழ்த்து செய்தியில், தீபஒளி திருவிழா அனைவரது வாழ்விலும் மதநல்லிணக்கம், மகிழ்ச்சி வளத்தை கொண்டுவர பிரார்த்திப்பதாக வாழ்த்தியுள்ளார்.

மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் வெளியிட்ட செய்தியில் இந்நன்னாளில் அனைவரது வாழ்விலும் துன்பம் விலகி இன்பம் பெருக வாழ்த்தியுள்ளார்.

திருச்சி மலைக்கோட்டை அருள்மிகு தாயுமானசுவாமி திருக்கோவில், மதுரை அருள்மிகு மீனாட்சி அம்மன் திருக்கோவில் உட்பட பல்வேறு திருக்கோவில்களில் சிறப்பு அபிஷேகங்கள் நடைபெற்றன.

திரளான மக்கள் நீண்டவரிசையில் நின்று சுவாமி தரிசனம் செய்து வருகின்றனர்.

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி அருள்மிகு ராஜகோபால சுவாமி திருக்கோவிலில் தீபாவளி பண்டிகையை ஒட்டி குபேரபூஜை எனப்படும் புதுக்கணக்கு தொடங்கும் நிகழ்ச்சி இன்று நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

காஞ்சிபுரம் அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோவிலில் சிறப்பு அலங்காரத்தில் அம்மன் வீதிஉலா இன்று நடைபெற்றது.

கோவிலின் ராஜகோபுர வாசலில் 30 ஆயிரம் அடி சரவெடி வெடித்து மக்கள் தீபாவளியை கொண்டாடினர்.

இதனிடையே சுற்றுச்சூழலை பேணும் வகையில் பாதுகாப்பான முறையில் ஒலி மற்றும் மாசற்ற தீபாவளியை கொண்டாடுமாறு மாநில மாசுகட்டுப்பாட்டு வாரியம் பொதுமக்களை கேட்டுக்கொண்டுள்ளது.

பட்டாசு வெடிக்க நேரக்கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ள நிலையில் மாநிலம் முழுவதும் காவல் துறையினர் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

ரயில்வே நிலையங்களில் கண்காணிப்பு பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

இது குறித்து சேலம் ரயில்வே பாதுகாப்பு படை ஆய்வாளர் திரு. முருகன் தெரிவிக்கையில்

.. வாய்ஸ் ..

பல கிராமங்களில் சுற்றுசூழல் அக்கறையுடன் வெடியில்லா தீபாவளி கொண்டாடப்பட்டு வருகிறது.

கோவை மாவட்டம் கிட்டாம் பாளையம்,

விழுப்புரம் மாவட்டம் வானூர் கழுப்பெரும்பாக்கம்

திருவண்ணாமலை மாவட்டம் ராயண்டபுரம்

சிவகங்கை மாவட்டம் வேட்டங்குடிப்பட்டி

சேலம் மாவட்டம் ஊனத்தூர் ஆகியவை இதில் அடங்கும்.

ஈரோடு மாவட்டம் வெள்ளோடு பறவைகள் சரணாலயத்தை கருத்தில் கொண்டு இப்பகுதி மக்கள் 19 ஆண்டுகளாக பட்டாசு இல்லா தீபாவளி கொண்டாடி மகிழ்வதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதனிடையே தீபாவளி பண்டிகையை ஒட்டி நாடுமுழுவதும் 7 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு பட்டாசுகள் விற்பனையானதால் பட்டாசு உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

கடந்த ஆண்டை ஒப்பிடும்போது நடப்பாண்டு பட்டாசு விற்பனை 20 சதவிகிதம் அதிகரித்துள்ளது.

❖❖❖❖❖❖❖❖

ராஜ்நாத் சிங்

மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் காவலர் வீரவணக்கநாளை முன்னிட்டு புதுதில்லியில் உள்ள தேசிய காவல் நினைவிடத்தில் தியாகிகளுக்கு நாளை அஞ்சலி செலுத்துகிறார்.

மத்திய ஆயுத காவல்படைகள் மற்றும் தில்லி காவல்துறையின் கூட்டு அணிவகுப்பும் நடைபெறும்.

இந்நிகழ்ச்சியில் ஓய்வுபெற்ற காவல்துறை தலைமை இயக்குநர்கள், காவல்துறை அதிகாரிகள் உள்ளிட்டோர் பங்கேற்கவுள்ளனர்.

இதனொருபகுதியாக நாளைமறுநாள் முதல் வரும் 30-ம் தேதி வரை தேசிய காவல் நினைவிடத்தில் பல்வேறு நிகழ்வுகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

❖❖❖❖❖❖❖❖

பீஹார்

**பீஹார் மாநிலத்தில் 20 மாவட்டங்களில் உள்ள** 122 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு அடுத்தமாதம் 11-ம் தேதி நடைபெறவுள்ள 2-வது இறுதிகட்ட தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்றுடன் நிறைவடைகிறது.

மனுக்கள் நாளை பரிசீலிக்கப்படும்.

அவற்றை திரும்பப்பெற வரும் 23-ம் தேதி கடைசிநாளாகும்.

இந்நிலையில் 18 மாவட்டங்களிலுள்ள 121 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு வரும் 6-ம் தேதி நடைபெறும் முதற்கட்ட தேர்தலுக்கான வேட்புமனுக்களை திரும்பப்பெற இன்றுகடைசி நாளாகும்.

இருகட்டங்களில் பதிவாகும் வாக்குகள் அடுத்தமாதம் 14-ம் தேதி எண்ணப்படவுள்ளன.

❖❖❖❖❖❖❖

**அணைகள்**

**வைகை அணை 68.5 அடியை எட்டியுள்ளதால் தேனி, மதுரை,** திண்டுக்கல், சிவகங்கை, ராமநாதபுரம் ஆகிய 5 மாவட்ட கரையோர மக்களுக்கு 2-ம் கட்ட வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பெரியகுளம் வனப்பகுதியில் பெய்த கனமழையால் தேனி மாவட்டம் சோத்துப்பாறை அணை முழு கொள்ளளவை எட்டியுள்ளது.

இதனால் அணைக்கு வரும் நீர் முழுவதும் தற்போது வெளியேற்றப்பட்டு வருவதால் கரையோர பகுதி மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக எமது தேனி செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. **வாய்ஸ்** ..

கனமழை காரணமாக ஈரோடு மாவட்டம் கடம்பூர் மலைப்பகுதியில் பெரும்பள்ளம் அணை நிரம்பி உபரிநீர் வெளியேற்றப்படுகிறது.

இம்மாவட்டத்தில் சத்தியமங்கலம் சுற்றுவட்டாரப் பகுதிகளில் கனமழையால் சேதமடைந்த சாலைகளை சீரமைக்கும் பணிகளில் நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் முழுவீச்சில் ஈடுபட்டுள்ளனர்.

விருதுநகர் மாவட்டம் கூமாபட்டி பிளவக்கல் பெரியாறு அணை நீர்மட்டம் 42 அடியை எட்டியதால் பாதுகாப்பு கருதி வினாடிக்கு 154 கனஅடிவீதம் நீர் திறக்கப்பட்டுள்ளது.

குற்றால அருவிகளில் நீர்வரத்து அதிகரித்து காணப்படுவதால் சுற்றுலா பயணிகள் குளிப்பதற்கான தடை 5-வது நாளாக இன்றும் தொடர்கிறது.

இதனிடையே மேட்டூர் அணைக்கு நீர்வரத்து இன்று விநாடிக்கு 14 ஆயிரத்து 420 கனஅடியாக அதிகரித்துள்ளது.

அணையின் நீர்மட்டம் 119.69 அடியாக உயர்ந்துள்ளது.

காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழைக்காரணமாக ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து வினாடிக்கு 14 ஆயிரம் கனஅடியாக அதிகரித்துள்ளது.

❖❖❖❖❖❖❖

**வானிலை**

**ராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சை, நாகை** கடலூர் மயிலாடுதுறை மாவட்டங்களில் இன்றும் நாளையும் மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வுமையம் அறிவித்துள்ளது.

இந்நிலையில் வங்கக்கடலில் காற்றழுத்த தாழ்வு பகுதி நாளை உருவாக வாய்ப்புள்ளதாக இம்மையம் கூறியுள்ளது.

கடலுக்குள் சென்றுள்ள மீனவர்கள் உடனடியாக கரைக்கு திரும்புமாறு அறிவுறுத்த படுகின்றனர்.

தமிழ்நாட்டில் பருவமழையை சமாளிக்க அனைத்து முன்னேற்பாட்டு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு உள்ளதாக மாநில அரசு அறிவித்துள்ளது.

சென்னை திரு.வி.க. நகர் பகுதியில் கழிவுநீர் உந்து நிலையங்களை சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும தலைவரும் அமைச்சருமான திரு.சேகர்பாபு இன்று பார்வையிட்டார்.

கழிவுநீர் தேங்காமல் இருக்க பணிகளை துரிதப்படுத்துமாறு அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

சாலையில் கழிவுநீர் தேங்காமல் இருக்கும் வகையில் இந்நடவடிக்கை.

❖❖❖❖❖❖❖

**டென்னிஸ்**

**ஆஸ்திரியாவில் நடைபெறும் வியன்னா ஓப்பன்** டென்னிஸ் ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் யூகிபாம்ரி, ஸ்வீடனின் ஆன்ட்ரோ இணை - ஆஸ்திரிய இணையை நாளை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.**

❖❖❖❖❖❖❖